# Tamil
# Grade 11


**Mrs. A. Lathamani**
(Teacher)

**J/Udupiddy Girls' College**

க.பொ.த(சா/த)

தமிழ்

**அற்றைத்திங்கள்** - நாடகம்

# அற்றைத் திங்கள் – நாடகம்

- இயற்றியவர் : கவிஞர் இன்குலாப். (1944 – 2016)
- இயற்பெயர் : சாகுல் ஹமீட்.
- நியூவெல் கல்லூரியின் பேராசிரியர்.
- உயிரோட்டமுள்ள கவிதைகளால் தமிழ்மொழிக்கு வளம் சேர்த்தவர்.
- ”மக்கள் பாவலர்” பட்டம் பெற்றவர்.
- இவரெழுதிய “ஔவை” நாடகம் தமிழின் முதலாவது நவீன நாடகமாகக் கருதப்பட்டது.



- இயற்றிய கவிதைகளில் முக்கியமானவை :
  - கண்மணி ராஜம்
  - நாங்க மனிசங்கடா
- நவீன சித்திரிப்புடன் எழுதப்பட்ட இலக்கியங்கள்:
  - கண்ணகி
  - மணிமேகலை
  - குறிஞ்சிப்பாட்டு



- புறநானூறு – அற்றைத்திங்கள்
- பாடியவர்கள் : பாரிமகளிர்
- பாரி – கொடை வள்ளல் , குறுநில மன்னன்,

  பறம்பு மலையை ஆண்டவன்.
- பாரியின் நண்பன் : கபிலர்.
- பாரியிடம் மிகுந்த அன்பு கொண்டவர் : ஔவையார்.
- முடியுடை மூவேந்தர் படையெடுப்பு.
- பாரி மன்னன் கொலைசெய்யப்பட்டமை.
- பறம்பு மலை கைப்பற்றப்பட்டமை.
- கபிலர் பாரிமகளிரை ஔவையாரிடம் ஒப்படைத்தல்.

- **நாடகத்தின் கருப்பொருள் :** பாரிமகளிரான அங்கவையும் சங்கவையும் பறம்பு மலையை விட்டுக் மனக்கவலையோடு  கபிலருடன் வெளியேறுகின்ற சந்தர்ப்பம்.
- **ஆசிரியர் நாடகத்தை நகர்த்தும் விதம் :** கவிதைகள்,தாலாட்டுப் பாடல்கள், உரையாடல்கள் மூலமாக பாரிமகளிர் தமது மனக்குமுறல்களை வெளிப்படுத்துவது போல் கவிஞர் இன்குலாப் படைத்துள்ளார்.

- பாடியவர் : பாரிமகளிர்
- திணை : பொதுவியல்
- துறை : கையறுநிலை

அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையு முடையேம் எம்குன்றும் பிறர்கொள்ளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார் யாமெந்தையும் இலமே!

பொருள் :

அந்த மாதம் அந்த வெண்நிலவில் எமது தந்தை இருந்தார். எமது குன்றும் இருந்தது. இந்த மாதம் இந்த வெண்நிலவில் வெற்றிமுரசு வேந்தர்கள் எமது குன்றும் கொண்டனர்.எங்கள் தந்தையும் இல்லையே.

**அங்கவை :** தந்தை கட்டிய கூடு .. புறாக் குஞ்சுகளைப் போல வளர்த்தார். அம்மாவின் முகம் நினைவில் இல்லை.. நிலாவைத்தான் காட்டினார்.

(தொலைவில் தாலாட்டுப்பாடல் ஒலிக்கிறது)

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ
ஊர் உறங்கும், பூவுறங்கும், உச்சிமலை
நிலா உறங்கும்.

- அடுத்து வருகின்ற பாடல்களில் இந்நாடகத்தில் தமது அன்றைய நிலையையும் இன்றைய நிலையையும் தாலாட்டுப் பாடல்கள் மூலம் வெளிக்காட்டுகின்றார்.
- அவ்வாறு வெளிக்காட்டும் போது அன்றைய நிலை பற்றி கூறும் போது ,
- அங்கவை: சங்கவை உள்ளே என்ன செய்கிறாய்? (தாலாட்டு தொடர்கிறது)

**அரளிப் பூத் தண்டாலே**

**அத்தை அடிச்ச கதை**

**மல்லிகைப்பூச் செண்டாலே**

**மாமன் அடிச்ச கதை**

**நேற்றசைந்த தொட்டிலிலே**

**நெஞ்சுருகக் கேட்டிருந்தோம்**

**காற்றெல்லாம் தேனிழைக்க**

**மலைமடியில் கண் வளர்த்தோம்**

சங்கவை: (இரு மரப்பாச்சிகளோடும் உலர்ந்து போன குறிஞ்சிப் பூக்களின் மாலையோடும் வருகிறாள்)

இதோ நாம் விளையாடிய மரப்பாச்சிகள். நாம் பல்லாலே கடிச்ச தடயங்கள் கூட இருக்கு. (தாலாட்டு தொடர்கிறது)

**அழகான நடை வண்டி**
**அசைந்தாடும் கிலுகிலுப்பை**
**பழக ஒரு மரப்பாச்சி**
**பாவையரே யார் பறிச்சா?**

**இது நினைவில்லையா? நம் மலைக் குறத்திகள் நமக்கு தொடுத்துத் தந்த குறிஞ்சி மலர்களி மாலை... பூவாடிடுச்சு.. ஆனா மணம் போகலை**

(தாலாட்டு தொடர்கிறது)

**அரளிப்பூந் தண்டெடுக்கப் போன அத்தை திரும்பலியே**

**மல்லிகைப் பூச்செண்டு கட்டப்போன மாமன் மீளலையே ……**

**தாலாட்டில் அசைந்திருந்த**

**தொட்டில் வரை ரத்த வெள்ளம்**

**பால் வார்த்த நிலா முகத்தில்**

**பற்றிவிட்ட தீப்பந்தம்**

**ஏலம்பூ வாய் பொசுங்க**

**எரியுறது தீக்கொழுந்து**

**காலப் புனல் கனக்கும்**

**கண்ணீரையும் சுமந்து**

**ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ**



அங்கவை: தந்தையில்லை.. தந்தையின் தேரில்லை.. பறம்பு மலையை, பறம்பு மலையில் பால் வார்க்கும் நிலவை.. சங்கவை எப்படி எடுத்துச் செல்வது?

சங்கவை : பறம்பு மலை மக்களின் அன்பை எப்படி விட்டுச் செல்வது? குறவர்கள்.. கானவர்கள்.. எயினர்கள்.. தந்தையின் பிரிவில் விதிர்த்துப் போய்விட்டார்கள்.

அங்கவை: முற்றுகை நடந்தபோது இந்தப் பெண்கள் மலை முகட்டிலிருந்து பகைவர்களுடைய குதிரைகளை விளையாட்டாக எண்ணிக் கொண்டிருப்பாங்க..

சங்கவை : அவ்வளவு நம்பிக்கை.. தங்கள் பாரியும்.. பறம்பும் வீழாது என்று.. கொஞ்சமும் அஞ்சாமல்..

அங்கவை: இப்போ பகல் பொழுதுகளில் ஈத்திலைக் குப்பை மேட்டில் ஏறிநின்று உமணர்கள் ஓட்டுகின்ற உப்பு வண்டியை எண்ணுறாங்க.

சங்கவை: வரகும் எள்ளும் முளைச்சு முதிர்ந்து கிடக்கிற இந்தப் புன்செய்களை விட்டுட்டுப் போக வேண்டியதுதான். நிலத்தில் புதைக்கப்பட்டு வெளியே எடுத்த கள்ளை ஒவ்வொரு குடிசையாய்ப் பகிர்வார்களே.. கள் மணக்கும் இந்தக் குடிசைகளை விட்டுவிட்டுப் போக வேண்டியது தான்..

(பெருமூச்சு) ( கபிலர் வருகிறார்... மகளிர் இருவரது தோள்களிலும் கைவைத்து )

கபிலர் : ஆம்.. புறப்பட வேண்டியதுதான்.. (அருவியின் ஆர்ப்பரிப்பு, பறவைகளின் பேச்சொலி, இலைகளின் சலசலப்பு... இவற்றைக் காது கொடுத்துக் கேட்கிறார்)

இப்போ.. இந்த மலையைப் பிரிவது மலையை விடக் கூடுதலாகக் கனக்கிறதே. ஆனால் என் அருமைச் செல்வங்களே.. புறப்பட வேண்டியதுதான்.. பறம்பு மலையின் இனிய சுனை நீரில் ஒரு முடக்கு குடியுங்கள். கடைசியாக முடிந்த மட்டும் இந்த மலைப் பூக்களின் மணத்தை இழுத்து மூச்சடக்கிக் கொள்ளுங்கள். கடந்து செல்கையில் காற்று வீசும். ஆனால் இந்த மலைப்பூக்களின் மணம்... பறவைகளின் ஒலி ஓயாது. பாரி இருந்தால் பேச்சுக் கொடுப்பார்.. புறப்படுகிறோம் பறம்பே..

மதுவிலும் புலாலிலும் களித்திருந்த நட்பு நம்முடையது. அருவியில் முகம் காட்டும் உன் அழகிய காட்சிகள்.. நீர்வாரும் கண்களின் ஈரத்தில் நிற்கும். பறம்பு மலையே நீ வாழ்க.

( கபிலர் முன் நடக்கப் பாரி மகளிர் தலை குனிந்தவர்களாகப் பின் தொடர்கின்றனர்... தாலாட்டு ஒலிக்கிறது)

தொ.சொ.கோ : பாரிமகளிர் பறம்பு மலையிலிருந்து
இப்பிடித்தான்.. பிடுங்கி எறியப்பட்டார்கள்.

விறலி 1 : வம்ப வேந்தர்களின் வன்முறை அவர்களைத்
துரத்தியது.

கோடி 1 : எல்லாக் காலங்களிலும் இதுதான் மண்ணின்
மக்கள் புலம்பெயரும் வரலாறு

கோடி 2 : மலைவாசிகள் இன்றளவும் இப்படித்தான்
வேரூன்றும் உரிமைகளும் மறுக்கப்பட்டு...

விறலி 2 : பறம்பைவிட்டுச் சென்ற பின் ஏதோ ஒரு நாளில் பாரி மகளிர் தாம் பிறந்து விளையாடிய பறம்பு மலையை நினைத்தனர். நினைத்த நாளும் ஒரு நிலவு நாளாக இருக்கலாம். தந்தையுடன் பறம்பு மலையில் எத்தனை நிலவு நாட்களில் இருந்து களித்தனர். பாரி தான் வேட்டையாடிய கதையைச் சொல்லியிருக்கலாம். கபிலர் ஒரு குறிஞ்சிப் பாட்டை இசைத்து இருக்கலாம். அந்த நிலா நாளில்...

எந்தை எம்முடன் இருந்தார். எம் குன்றையும் பிறர் கொள்ளவில்லை. இந்த நிலா நாளிலோ இக்குன்றைக் கொண்டோம் என்று வென்ற வேந்தர்களின் முரசொலிக்கிறது. மேலும் இந்தக் கதையைத் தொடர்வதற்கு எந்தை எம்முடன் இல்லையே என்ற கவலை.

**இன்குலாப்**

# வினாக்கள்

1. அ) அற்றைத் திங்கள் நாடகத்தின் ஆசிரியர் யார்?

   கவிஞர் இன்குலாப்

   ஆ) அவரது ஏனைய ஆக்கங்கள் இரண்டினைத் தருக.

   ஔவை

   நாங்க மனிசங்கடா

   கண்மணி ராஜம்

2. அ) கவிஞர் இன்குலாப் பெற்றுக்கொண்ட பட்டம் யாது?

   மக்கள் பாவலர்

   ஆ) அவரது இயற்பெயர் யாது?

   சாகுல் ஹமீட்

3. “அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையு முடையேம் எம்குன்றும் பிறர்கொளார்”

அ) இப் பாடலைப் பாடியவர் யார்?

பாரிமகளிர்

ஆ) எம் குன்று என்பது குறித்து நிற்கும் பொருள் யாது?

எமது பறம்பு மலை

4. அ) “அற்றைத் திங்கள்” என்ற பாடல் இடம்பெறும் இலக்கியம் யாது?

புறநானூறு

ஆ) இப்பாடலின் திணை , துறை யாது?

திணை : பொதுவியல்

துறை : கையறுநிலை

5. அ) பாரி மன்னன் வாழ்ந்த காலம் யாது?

சங்க காலம்

ஆ) “அற்றைத்திங்கள்” என்ற தொடரில் திங்கள் குறித்து நிற்கும் பொருள் யாது?

மாதம்

6. அ) பாரிமகளிர் எனக் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?

அங்கவை , சங்கவை

ஆ) பாரிமன்னன் ஆட்சி செய்த இடம் யாது?

பறம்பு மலை

7. அ) வென்று எறி முரசின் வேந்தர் யாவர்?

சேர சோழ பாண்டியர்

ஆ) அற்றைத்திங்கள், இற்றைத்திங்கள் எனக் கூறப்படுவதற்கான காரணம் யாது?

அற்றைத்திங்கள் - பாரிமகளிர் தங்கள் தந்தையுடன் தமது குன்றில் சந்தோசமாக வாழ்ந்திருந்தனர்.

இற்றைத்திங்கள் - அவர்கள் தந்தையை இழந்தும் தமது குன்றை இழந்தும் ஏங்கி நின்றனர்.

8. அ) பாரி மன்னனின் நெருங்கிய நண்பர் யார்?

கபிலர்

ஆ) பாரி மன்னன் இறந்த பின் அவரது பிள்ளைகள் யாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்?

ஔவையாரிடம்

9. அ) “தந்தை கட்டிய கூடு...புறாக்குஞ்சு போல வளர்த்தார் அம்மாவின் முகம் நினைவில் இல்லை... நிலவைத்தான் காட்டினார்” இதில் வந்துள்ள அணி யாது?

உவமை அணி

அ) “அற்றைத்திங்கள்” எனும் நாடகத்தில் வரும் முக்கியமான கதாபாத்திரங்கள் எவை?

அங்கவை,சங்கவை,கபிலர்

10. அ) உமணர்களின் தொழில் யாது?

உப்பு விற்றல்

ஆ) இந்நாட்டு விளைநிலங்களில் பெரிதும் விளைந்திருப்பவை எவை?

வரகு, எள்ளு

11. அ) “அற்றைதிங்கள்” என்ற நாடகம் வெளிப்படுத்தும் உணர்வு யாது?

தந்தையையும், தாய் நாட்டையும் இழந்த சோகம்

ஆ) இந் நாடகத்தில் வரும் “மரப்பாச்சிகள்”என்பது எதனைக் குறிக்கிறது?

மரப்பொம்மைகள்

12. “…அம்மாவின் முகம் நினைவில் இல்லை…நிலாவைத்தான் காட்டினார்”

ஆ) இது யார் கூற்று?

அங்கவை

ஆ) இதனூடாக எத்தகைய உணர்வு வெளிப்படுத்தப்படுகிறது?

ஏக்கம், சோகம், தாயை இழந்து விட்டோமே என்ற விரக்தி நிலை

13. “இப்போ பகல் பொழுதுகளில் ஈத்திலைக் குப்பை மேட்டில் ஏறி நின்று உமணர்கள் ஓட்டுகிற உப்பு வண்டியை எண்ணுறாங்க”

அ) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?

அங்கவையால்

ஆ) உமணர்கள் என்போர் யார்?

உப்பு விற்பவர்கள்

14. “என் அருமைச் செல்வங்களே புறப்பட வேண்டியது தான். பறம்பு மலையின் இனிய சுனைநீரில் ஒரு முடக்குக் குடியுங்கள்”

அ) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?

கபிலரால்

ஆ) இம்மலையில் பூக்கும் பூ எது?

குறிஞ்சி

15. “கடைசியாக முடிந்த மட்டுக்கும் இந்த மலைப்பூக்களின் மணத்தை இழுத்து மூச்சடக்கிக் கொள்ளுங்கள் கடந்து செல்கையில் காற்று வீசும். ஆனால் இந்த மலைப்பூக்களின் மணம்... பறவைகளின் ஒலி ஓயாது”

அ) இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

கபிலரால் பாரிமகளிருக்கு

ஆ) இங்கு வெளிப்படுகின்ற உணர்வு யாது?

பிரிவுத்துயர்

1. அற்றைத்திங்கள் நாடகத்தின் கருவாக அமைந்த செய்தி யாது?

பாரிமகளிரான அங்கவை, சங்கவை பறம்புமலையை விட்டு மனக்கவலையுடன் கபிலருடன் வெளியேறுகின்ற சந்தர்ப்பம் இந் நாடகத்தின் கருவாகஉள்ளது.

2. பாரிமகளிரின் துன்பங்களைக் காட்டுவன யாவை?

- நினைவில்லாத தாயின் முகம்
- நிலாவைக் காட்டி மகிழ்வித்த அன்புத் தந்தையை இழந்த துயரம்
- பறம்புமலையை விட்டுப் பிரிய மனமற்ற நிலை

3. இந் நாடகத்தில் வரும் தாலாட்டுப் பாடல்கள் எந்த நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன?

பறம்புமலையின் நேற்றைய நிலையையும், இன்றைய துயர் தோய்ந்த நிலையையும் படம்பிடித்துக் காட்டுகின்றன.

4. இந் நாடகத்தின் நிறைவில் ஒலிக்கும் குரல்கள் கூறும் செய்திகள் யாவை?

இத் துயரச் சம்பவத்தை சமகாலத் துயர்களுடன் பொருத்திக் காட்டுகின்றன.

5. இந் நாடகத்திற்கு “அற்றைத்திங்கள்” என்ற தலைப்பு பொருத்தமானதா? காரணம் தருக?

ஆம்,பாரிமகளிரின் அன்றைய நிலையையும் இன்றைய நிலையையும் எடுத்துக் காட்டும் விதமாக அற்றைத்திங்கள் என கொடுக்கப்பட்டது பொருத்தமானதாகும்.

6. பாரிமன்னன் தம் மகளிரை வளர்த்த விதம் எவ்வாறு கூறப்படுகிறது?

- தாயின் முகம் தெரியாத பிள்ளைகளுக்கு நிலவைக் காட்டி வளர்த்தார்.
- பறம்பு மலைப் பகுதியில் வாழ்ந்தவர்களோடு மகிழ்வாக வாழ்ந்த நிலை,
- தந்தைகட்டிய கூடு..புறாக்குஞ்சுகளைப் போல வளர்த்தார்....என்பதன் மூலம் பாதுகாப்பாக வளர்த்தார்.
- தாயாகவும் தந்தையாகவும் பிள்ளைகளை வளர்த்தார்.

7. பாரி மகளிரின் மனநிலை பற்றி எடுத்துக் காட்டுக?

- துயரம் தோய்ந்த மனநிலை
- தாயைத் தெரியாத அவலம்
- தந்தையின் இழப்பு
- நாட்டைவிட்டுப் பெயர்தல் இவைகளுடன்
- பாவை, மாலை என்பன எடுத்து விளையாடி மகிழ்ந்த நிலை
- குறிஞ்சி மலர் மாலைகளின் நறுமணம் கூட மாறவில்லையே என வருந்துதல்
- கபிலரின் வேண்டுகோளை ஏற்று நடக்கும் மனப்பாங்கு
- ஏக்கஉணர்வு—எல்லாமே இழந்தநிலை

8. துயரத்தின் வெளிப்பாட்டைப் புலப்படுத்த இந் நாடக ஆசிரியர் கையாண்ட உத்திகள் யாவை?

- நேற்றசைந்த தொட்டிலிலே நெஞ்சுருகக் கேட்டிருந்தோம்... இப் பாடலடிகளுக்கூடாக துயரத்தின் வெளிப்பாடு காட்டப்படுகிறது.
- பாரிமகளிர் சிறுவயதில் விளையாடிய மரப்பாச்சிகளும், குறிஞ்சி மலர் மாலையின் மணம் கூட இன்னமும் நீங்கவில்லை என்பது கூட துயரத்தின் வெளிப்பாடாகின்றது.
- தாலாட்டுப் பாடல்கள் போரினால் ஏற்பட்ட பேரழிவை சுட்டுகிறது.

  அத்தைமாமன் திரும்பாமை, தொட்டிலே ரத்தவெள்ளம், நிலாமுகத்தில் தீப்பந்தம் என்பவை அழிவினால் ஏற்பட்ட விளைவாகக் காண்பிக்கப்பட்டுள்ளன.
- “ஏலம்புவாய் பொசுங்க எரியுறது தீக்கொழுந்து.....”என்ற பாடலின் மூலமாகவும் பறம்புமலை மக்களது துயரத்தின் வெளிப்பாட்டைக் காட்ட கையாண்ட உத்திகளாகக் காணப்படுகிறது.

9. “இப்போ... இந்த மலையை விடக் கூடுதலாக கனக்கிறதே ஆனால் என் அருமைச் செல்வங்களே புறப்பட வேண்டியது தான். பறம்பு மலையின் இனிய சுனைநீரில் ஒரு முடக்குக் குடியுங்கள். கடைசியாக முடிந்த மட்டுக்கும் இந்த மலைப்பூக்களின் மணத்தை இழுத்து மூச்சடக்கிக் கொள்ளுங்கள்”

அ) இப் பகுதியில் மண் மீது கொண்ட பற்று எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது?

மலையைப் பிரிவது மலையைவிடக் கனக்கிறதே.

மலையின் இனிய சுனைநீரில் ஒரு முடக்குக் குடியுங்கள்.

கடைசியாக முடிந்த மட்டும் இந்த மலைப் பூக்களின் மணத்தை இழுத்து மூச்சடக்கிக் கொள்ளுங்கள் என்பதனூடாக எடுத்துக் காட்டப்படுகிறது.

ஆ) இவ்வுரையாடல் யார் யாருக்கிடையே இடம்பெறுகிறது?

கபிலருக்கும் பாரிமகளிரான அங்கவை, சங்கவைக்கும் இடையில்

10. அற்றைத்திங்கள் என்ற நாடகத்தில்

அ) உறவின் பலம்

ஆ) நாட்டின் வளம்

ஆகியன புலப்படுத்தப்படுமாற்றினை விளக்குக

அ) உறவின் பலம்

- குடும்ப உறவு
  (தந்தை, தாய், அத்தை, மாமன் )
- சமூக உறவு
  மலையுடனான தொடர்பு
  மக்களுக்கிடையிலான தொடர்பு
  விளையாட்டுபொருட்களுக்கிடையிலான தொடர்பு

ஆ) நாட்டின் வளம்

- பூக்கள், தேன், பறவைகளது வளம்
- நீர்சுனை
- புலால்,கள்
- உப்புவளம்
- தானிய வளம்

## கடந்த காலப்பரீட்சை வினாக்கள்

### 2017 – 10 ஆவது வினா

1. “அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில் எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர் கொளார்”

அ. இங்கு எந்தை என்று குறிப்பிடப்படுபவர் யார்?

பாரி மன்னன்/ பாரி/ அங்கவை,சங்கவையின் தந்தை

ஆ. இங்கு குறிப்பிடப்படும் குன்றின் பெயர் யாது?

பறம்புமலை

2018– 10 ஆவது வினா

2. “ஏலம்புவாய் பொசுங்க
எரியுறது தீக்கொழுந்து
காலப்புனல் கனக்கும்
கண்ணீரையும் சுமந்து”

அ. “ஏலம்புவாய்” என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

வாசனையுள்ள வாய்/ நறுமணமுள்ள வாய்

ஆ. காலப்புனல் என்பதில் இடம்பெற்ற அணி யாது?

உருவகஅணி

## 2016 – 2ஆவது வினாவில் (v) ஆவது வினா

3. என் அருமைச் செல்வங்களே....புறப்பட வேண்டியது தான் பறம்புமலையின் இனிய சுனை நீரில் ஒரு முடக்கு குடியுங்கள், கடைசியாக முடிந்த மட்டுக்கும் இந்த மலைப் பூக்களின் மணத்தை இழுத்து மூச்சடக்கிக் கொள்ளுங்கள், கடந்து செல்கையில் காற்றுவீசும். ஆனால் இந்த மலைப் பூக்களின் மணம்...பறவைகளின் ஒலிஓயாது. பாரி இருந்தால் பேச்சுக் கொடுப்பார்...புறப்படுகிறோம் பறம்பே...மதுவிலும் புலாலிலும் களித்திருந்த நட்பு நம்முடையது.

அ. இக் கூற்று எத்தகைய மனநிலையில் கபிலரால் கூறப்பட்டது?

சொந்த நாட்டை விட்டுப் பிரிகின்ற சோகமான மனநிலையில்

ஆ. பாரியிடம் கபிலருக்குள்ள ஈடுபாடு எவ்வாறு புலனாகின்றது?

பாரி இருந்தால் பேச்சுக் கொடுப்பார், மதுவிலும் புலாலிலும் களித்திருந்த நட்பு நம்முடையது என்ற கூற்றுக்களினூடாக அல்லது பாரியோடு தான் பழகிய நினைவுகளை மீட்பதனூடாக

4. அற்றைத் திங்கள் என்ற நாடகத்தில்

அ. புலப்பெயர்வின் அவலம்

ஆ. நாடக ஆசிரியரின் படைப்பாற்றல் என்பன புலப்படுமாற்றினை விளக்குக?

அ. புலப்பெயர்வின் அவலம்

பாரியின் பறம்புமலையை கைப்பற்றியமையும் பாரியின் இறப்பும் நிகழ்ந்ததன் பின்னர் பாரிமகளிர் பறம்புமலையை விட்டு புலம்பெயரும் சூழல் ஏற்படுகின்றது. அவர்கள் கபிலருடன் புறப்படுகிற சூழலை அடிப்படையாகக் கொண்டு புலம்பெயர்வின் அவலம் வெளிக்காட்டப்படுகிறது.

- நாட்டுப் புறத் தாலாட்டுப் பாடலின் ஊடாக மன அவலத்தை வெளிப்படுத்தல்

அழகானநடைவண்டி
அசைந்தாடும் கிலுகிலுப்பை
பழக ஒரு மரப்பாச்சி
பாவையரே யார் பறிச்சா?

- அங்கவை சங்கவை ஆகியோரின் கூற்றுக்களாக அமைவன
  1. பறம்புமலையின் பால் வார்க்கும் நிலவை எவ்வாறுஎடுத்துச் செல்வது
  2. இந்தப் புன்செய் நிலங்களை விட்டுப் போக வேண்டியதுதான்
  3. கள் மணக்கும் குடிசைகளை விட்டுப் போக வேண்டியதுதான்

- கபிலர் வாயிலாக
  1. இப்போது மலையைப் பிரிவது மலையை விடக் கூடுதலாக கனக்கிறது
  2. பறம்புமலை சுனைநீரை முடிந்த மட்டும் குடியுங்கள்
  3. மலைப் பூக்களின் மணங்களை நுகருங்கள் என்று குறிப்பிடுகின்றார்.

ஆ. நாடக ஆசிரியரின் படைப்பாற்றல் என்பன புலப்படுமாற்றினை விளக்குக?

1. நாடக வடிவம் - புறநானூற்றுச் செய்யுள் வடிவத்திற்கு நாடக வடிவமாக புதுவடிவம் கொடுத்தல்
2. களச்சித்தரிப்பு –பறம்புமலை மீதான முற்றுகை, பிரிவு ஆகியவற்றைக் கவிதையாகவும் உரைநடையாகவும் சித்தரித்தல்
3. பாத்திரப்படைப்பு –பண்டைய கதை ஒன்றில் குறிப்பிடப்படும் பாத்திரங்களைப் படைத்து அவற்றின் ஊடாகக் கதையை நகர்த்தல்
4. உணர்வலைகள் - புலம்பெயர் நிலையின் அவலத்தையும் சோகத்தையும் இணைத்து வெளிப்படுத்தல்
5. மொழிநடைப் பிரயோகம் - செம்மொழிச் சொற்களைக் கையாளுதல்
6. சமகாலத்துடன் தொடர்புபடுத்தல்

(பாடல் அடிகளும் கொடுக்கலாம்)